FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under sections 154 Cr.P.C.)
(குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 154 இன் கீழ்)

Under Section 173 BNSS

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8109727

1. District : அரியலூர் PS: V & A C Year: 2026 FIR No.: 2/26 Date: 18.03.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 (amended 2018) Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(b) r/w 12

(ii) Act சட்டம்: இ.த.ச. Sections பிரிவுகள்: 409, 419, 420, 465, 468, 471, 477 r/w 34 IPC

(iii) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 (amended 2018) இ.த.ச Sections பிரிவுகள்: 12 pc Act and 420 r/w 34 IPC Act.

ஊழல் தடுப்பு சட்டம் 1988 (amended 2018) &

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : இ.த.ச. 12 of pc Act and 419, 420, r/w 34 IPC Act.

3. (a) Occurrence of Offence Day : Date from : 2019 Date to : 2021
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 18.03.2026 Time : 15.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 18.03.2026 Time : 15.00 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக அரியலூர் ஊ.த.க. பிரிவு கிராமிய அசாரணை தகவல்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 55 KM வடகிழக்கு

Beat Number : (b) Address : —
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : B. நதியா (b) Father's/ Husband's Name : S/o. பாலகிருஷ்ணன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : — (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தனியார் அலுவலர் (g) Address : ஊ.த.க. பிரிவு, அரியலூர்.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு.மதி. ஸ்ரீதேவி, 52/26, த/பெ. தூரை, மாட்டார வளர்ச்சி அலுவலர் / கண்காணிப்பாளர், (பொறு), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, அரியலூர். (மேலும் மாட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), நா. பதவி ஊராட்சி துணைத்தலைவர் மற்றும் 9 நபர்கள்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, அரியலூர் B.கவிதா ஆகிய நான் இன்று 18.03.2026-ம் தேதி 15.00 மணியளவில் அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் பணியில் இருந்த போது சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரக குறிப்பாணை எண்.PE 5/2024/RDP/ARL dt:17.03.2026 ன் உத்தரவுப்படி பதிவு செய்த வழக்கின் விபரம் பின்வருமாறு

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது-

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் K. Kபாலமுருகன் பதவி DSP நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு பெரம்பலூர், மைலஅரியலூர் காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

18.03.26
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 18.03.2026 at 18.00 hrs.

Name: பெயர் B. கவிதா
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண் VAAC அரியலூர்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 02/2026 முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-க்கான இணைப்பு:-

எதிரிகள்	
1. திருமதி. ஸ்ரீதேவி, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், தற்போது வட்டார வளர்ச்சி அலுவலர் கண்காணிப்பாளர்(பொது), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, அரியலூர் மாவட்டம்.	1-ம் எதிரியான திருமதி.ஸ்ரீதேவி, என்பவர் அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஆக 15.05.2020 முதல் 25.02.2021 வரை பணிபுரிந்துள்ளார். தற்போது அரியலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் வட்டார வளர்ச்சி அலுவலர்/ கண்காணிப்பாளர்(பொது)-ஆக பணிபுரிந்து வருகிறார்.
2. திரு.ஜாகீர் உசேன், த/பெ. சேக் அகமத், வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், தற்போது வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), செந்துரை ஊராட்சி ஒன்றியம், அரியலூர் மாவட்டம்.	2-ம் எதிரியான திரு.S.ஜாகிர்உசேன் என்பவர் அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், (கி.ஊ) 11.02.2019 முதல் 13.05.2020 வரை வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்துள்ளார். தற்போது செந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் வட்டார வளர்ச்சி அலுவலராக (வ.ஊ) பணிபுரிந்து வருகிறார்.
3. திருமதி.த.செல்வி, பணிமேற்பார்வையாளர், தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், தற்போது ஒன்றிய பணிமேற்பார்வையாளர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருமாளூர், அரியலூர் மாவட்டம்.	3-ம் எதிரியான திருமதி.த.செல்வி என்பவர் அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 01.01.2019 முதல் 25.02.2021 வரை பணிமேற்பார்வையாளராக பணிபுரிந்துள்ளார். தற்போது திருமாளூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஒன்றிய பணிமேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறார்.
4. திரு.C.வெங்டேசன், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், தா.பழூர், அரியலூர். தற்போது: துணை வட்டார வளர்ச்சி அலுவலர், ஜெயங்கொண்டம், அரியலூர். 5. திரு.K.கிருஷ்ணமூர்த்தி, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஓய்வு), தா.பழூர், அரியலூர்.	4-ம் எதிரியான திரு.C.வெங்கடேஷ் என்பவர் அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 16.07.2020 முதல் 25.02.2021 வரை மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்துள்ளார். தற்போது ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்து வருகிறார்.
6. திரு.சேகர் த/பெ.ராமானுஜம் (தனி நபர்), காலனி தெரு, தா.பழூர், அரியலூர் மாவட்டம்.	5-ம் எதிரியான திரு.K.கிருஷ்ணமூர்த்தி என்பவர் அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 01.01.2019

7. திரு.நடராஜன், த/பெ.ராமலிங்கம், (தனி நபர்), தெற்கு தெரு, தா.பழூர், அரியலூர் மாவட்டம். 8. திரு.கலியபெருமாள், த/பெ.கிருஷ்ணன் (தனிநபர்), எண் 93, ஆண்டித் தெரு, தா.பழூர், அரியலூர் மாவட்டம். 9. திரு.அழகிரி த/பெ.கோவிந்தராஜ், (தனி நபர்), கீழ வீதி, தா.பழூர், அரியலூர் மாவட்டம். 10. திரு.சுப்பிரமணியன், த/பெ.கலியமூர்த்தி (தனி நபர்), காமராஜ் நகர், தாதம்பேட்டை, தா.பழூர், அரியலூர் மாவட்டம்.	முதல் 30.11.2019 வரை மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்துள்ளார். கடந்த 30.06.2023-ம் தேதி பணி ஓய்வு பெற்றுவிட்டார். மேற்படி 1 முதல் 5 வரையிலான எதிரிகள் சம்பவம் நடைபெற்றுள்ள காலத்தில் ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தம் 2018) பிரிவு 2 (c)-ன்படி பொது ஊழியர்கள் ஆவார்கள். எதிரி-6 திரு.சேகர், த/பெ.ராமானுஜம், எதிரி-7 திரு.நடராஜன் த/பெ.ராமலிங்கம், எதிரி-8 திரு.கலியபெருமாள், த/பெ.கிருஷ்ணன், எதிரி-9 திரு.அழகிரி த/பெ.கோவிந்தராஜ் மற்றும் எதிரி-10 திரு.சுப்ரமணியன் த/பெ. கலியமூர்த்தி ஆகியோர்கள் தனி நபர்கள் ஆவர்.

கான்கிரீட் கூரையினாலான சொந்த வீடு இல்லாத, கிராமங்களில் வசிக்கும் ஏழை, எளிய மக்களுக்கு கான்கிரீட் வீடு வழங்கும் திட்டம் கடந்த 2015-2016 ஆம் ஆண்டு முதல் அரசால் இந்திரா குடியிருப்பு திட்டம் (IAY) என்ற பெயரில் செயல்படுத்தப்பட்டு வந்தது. அதனைத் தொடர்ந்து 2016-17 முதல் பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்) (PMAY-G) என்ற பெயரில் தற்போது வரை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த 2016-2017 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வரும் PMAY(G) திட்டத்திற்கு, Socio Economic and Caste Census-2011 (SECC data)-இல் இருந்து ஊராட்சி வாரியாக இத்திட்டத்திற்கு தேர்வு செய்ய தகுதியான நபர்களின் பெயர் விபரங்களை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்கள் பெற்று, பட்டியலில் உள்ள நபர்கள் தற்போது இத்திட்ட பயனாளியாக தேர்வு செய்ய தகுதியுடையவரா என்பதனை உறுதிபடுத்துவதற்காக பயனாளிகளின் பெயர் பட்டியலை சம்பந்தப்பட்ட மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் ஊராட்சி செயலர் ஆகியோர்களுக்கு அனுப்பி வைப்பார். அதன்படி, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் ஊராட்சி செயலர் ஆகிய இருவரும் சேர்ந்து தல ஆய்வு மேற்கொண்டு, பட்டியலில் உள்ள நபர் தற்போது PMAY திட்டத்தின்கீழ் பயனாளியாக தேர்வு செய்ய தகுதியுடைய நபரா என்பதையும், வீடு கட்டுவதற்கான காலிமனை உள்ளதா என்பதனை, தற்போது பயனாளர் வீடு கட்டுவதற்கு தயாராக உள்ளாரா என்பதையும் சரிபார்த்து, அதன்படி சரிபார்ப்பு படிவத்தினை பூர்த்தி செய்து, அதில் இருவரும் கையொப்பம் செய்து, பயனாளரின் ஆதார், குடும்ப அட்டை, MGNREGS அட்டை, வங்கி கணக்கு புத்தகம் ஆகியவற்றின் நகல்களை பெற்று, சரிபார்ப்பு படிவத்துடன் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். தகுதியற்ற நபராக

இருந்தால் சரிபார்ப்பு படிவத்தில் PMAY திட்ட பயனாளியாக தேர்வு செய்ய தகுதியற்ற நபர் என்பதனை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும். வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்கள் அதனை உறுதி செய்த பின்னர் தகுதியான பயனாளிகளை PMAY(G) திட்ட பயனாளியாக தேர்வு செய்ய வேண்டி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலருக்கு பரிந்துரை செய்ய வேண்டும். அவ்வாறு பரிந்துரை செய்யும் போது, அரசு வேலையில் உள்ளவர்கள், கான்கிரீட் வீடு உள்ளவர்கள், ஏற்கனவே வேறு ஏதேனும் குடியிருப்பு திட்டங்களில் பயன் அடைந்தவர்கள் ஆகியோர்களை இணங்கண்டு, பட்டியலில் இருந்து தகுதி நீக்கம் செய்து தகுதியான நபர்களை திட்டபயனாளியாக தேர்வு செய்ய வேண்டியது வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களது பணியாகும்.

பின்னர், பட்டியலில் உள்ள நபர்களுகளை PMAY(G) திட்ட பயனாளியாக தேர்வு செய்திட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அவர்களால் அனுமதி வழங்கப்படும். அதன்படி, வட்டார வளர்ச்சி (கி.ஊ) அலுவலரால் பயனாளர்களுக்கு வீடுகட்ட அனுமதி ஆணை (Work Order) வழங்கப்படும். பின்னர் ஒன்றிய பணி மேற்பார்வையாளர், பயனாளிகள் வீடுகட்ட தேர்வு செய்துள்ள இடத்தில் அளவீடு செய்து கொடுப்பது, பணிகள் வீடு கட்டும் பணியினை ஒவ்வொரு நிலையிலும் (Basement, Plinth, Roof, Completed) Geo-Tag புகைப்படம் எடுப்பது, Bill Form Book தயார் செய்து அதனை உதவி பொறியாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். உதவி பொறியாளர், அளவீடுகள் மற்றும் மதிப்பீடுகள் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்த பின்னர் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அனுப்பி வைக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்கள் மதிப்பீடு பட்டியலையும், Geo-Tag புகைப்படங்களையும் ஒப்பிட்டு சரிபார்த்து, தல ஆய்வு செய்து உறுதிசெய்த பின்னர் Online-ல் உள்ள தனது Login-ல் பயனாளிகளுக்கான தவணைத் தொகைகளை விடுவிக்க அனுமதிக்க வேண்டும். அவ்வாறு அனுமதிக்கப்பட்ட பின்னர் பயனாளிகளுக்கான தவணைத்தொகை அவர்களது வங்கி கணக்குகளில் ECS மூலமாக வரவவைக்கப்படும். இதில் பயனாளி அல்லது பயனாளியின் குடும்பத்தார் அல்லாத நபர்களின் வங்கிகணக்கில் பணம் வரவு வைக்கப்பட கூடாது.

இத்திட்டத்தில் பயனாளி ஒருவருக்கு, ஒரு வீட்டிற்கு மொத்தம் ரூ.1,70,000/- (ரூ.1,20,000/-ரொக்கப் பணம் மற்றும் ரூ.50,000/-மதிப்புடைய கட்டுமான பொருட்கள்) வழங்கப்படும். இதில் ரூ.1,20,000/- பணம், 4 தவணைகளாக பயனாளரின் வங்கி கணக்கில் செலுத்தப்படும். மேலும், வீடுகட்டும் பணி நடைபெற்றுவரும் போது ரூ.50,000/- மதிப்புடைய சிமெண்ட் மூட்டைகள் மற்றும் இரும்பு கம்பிகள் பயனாளருக்கு வழங்கப்படும். இவ்வாறாக PMAY(G) திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

எதிரி-1 திருமதி.ஸ்ரீதேதி என்பவர் தா.பழூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்த காலத்தில் எதிரி-3 திருமதி.செல்வி மற்றும் எதிரி-

4 திரு.வெங்கடேஷ் ஆகியோரை கூட்டாக சேர்த்துக்கொண்டு வீடு கட்டுவதற்கு சொந்தமாக நிலம் இல்லாத தா.பழூர் கிராமத்தைச்சேர்ந்த எதிரி-6 திரு.சேகர், எதிரி-7 திரு.நடராஜன் மற்றும் எதிரி-8 திரு.கலியபெருமாள் ஆகியோர்களை PMAY திட்ட பயனாளியாக தேர்வு செய்து வீடு கட்ட பணி ஆணை வழங்கியுள்ளார்கள். பின்னர் மேற்படி எதிரிகள் 6, 7 மற்றும் 8 ஆகியோர்கள் வீடு கட்டாமல் இருந்து வந்தநிலையில், அதனை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு மேற்படி எதிரிகள் 6, 7 மற்றும் 8 ஆகியோரை கூட்டாக சேர்த்துக்கொண்டு PMAY திட்டத்தில் வீடு கட்டாமலேயே, வீடு கட்டியது போன்று பொய்யான ஆவணங்களை தயார் செய்து, அதனை உண்மையென பயன்படுத்தி எதிரி-3 தனது Login ID-யில் வேறு நபர்கள் கட்டிய வீட்டின் அருகே எதிரிகள் 6, 7 மற்றும் 8 ஆகியோரை நிற்க வைத்து JIO TAGE-ல் புகைப்படம் எடுத்துள்ளார். பின்னர் அளவீடு மற்றும் மதிப்பீடுகள் செய்தது போன்று பொய்யான Bill Form Book தயார் செய்து எதிரிகளுக்கு காசாக்கம் செய்து வழங்க சிபாரிசு செய்துள்ளதுள்ளார். பின்னர் எதிரி-1 எதிரிகள் 6, 7 மற்றும் 8 ஆகியோர்களுக்கு தவணைத் தொகை விடுவிக்கப்பட்டு எதிரிகளின் வங்கி கணக்குகளில் ECS மூலம் தலா ரூ.1,20,000/-ம் வரவு வைக்கப்பட்டுள்ளது. மேலும், எதிரிகள் மூவருக்கும் தலா ரூ.46,920/- மதிப்புடைய கட்டுமானப் பொருட்களான சிமெண்ட், இரும்பு கம்பிகள் வழங்கியுள்ளார்கள்.

மேலும், SECC- Data-ன்படி தேர்வு செய்யப்பட்ட பட்டியலில் பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் வீடு பெறுவதற்கான முன்னுரிமை அடிப்படையில் தா.பழூர் கிராமம் காளியம்மன்கோவில் தெருவைச்சோந்த பரமசிவம் மகன் அழகிரி என்பவரின் பெயர் இருந்துள்ளது. அவர் கடந்த 2019-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இயற்கை எய்திவிட்டார் என்பதை அறிந்த எதிரி-2 திரு.ஜாகிர்உசேன் தா.பழூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலராக (கி.ஊ) பணிபுரிந்த காலத்தில் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலரான எதிரி-5 திரு.கிருஷ்ணமூர்த்தி மற்றும் பணிமேற்பார்வையாளரான எதிரி-3 திருமதி.செல்வி ஆகியோர்கள் கூட்டாக சேர்ந்து தா.பழூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தற்காலிகமாக பணிபுரிந்த திருமதி.விஜயா என்பவரின் மகனான (SECC-Data-வில் பெயர் இல்லாத) எதிரி-9 அழகிரி, த/பெ.கோவிந்தராஜ் என்பவரது ஆவணங்களை பெற்றும், ஆள்மாறாட்டம் செய்து எதிரி-9ஐ நிற்க வைத்து Jio Tag புகைப்படம் எடுத்தும், PMAY(G) TN1374473 நாள் 31.08.2019-ன்படி அழகிரி த/பெ.பரமசிவம் என்பவரின் பெயரில் வீடு கட்டுவதற்கான பணி ஆணையினை வழங்கியுள்ளார்கள். பின்னர் எதிரி-1 திருமதி.ஸ்ரீதேவி மற்றும் எதிரி-2 திருமதி.செல்வி ஆகியோர் ஆள்மாறாட்டம் செய்யப்பட்டுள்ளதை கண்டுபிடித்து மேற்படி அழகிரி த/பெ.பரமசிவம் என்பவரது பெயரில் வழங்கப்பட்ட பணி ஆணையினை ரத்து செய்யாமல் எதிரி-9 உடன் கூட்டு சேர்ந்து, பொய்யான ஆவணங்களை தயார் செய்து, பணிஆணையில் குறிப்பிட்டுள்ள பயனாளி அல்லாத எதிரி-9 அழகிரி த/பெ.கோவிந்தராஜ் என்பவரது வங்கி கணக்கில்

தவணைத்தொகை ரூ.1,20,000/-ம் வரவு வைத்தும், தலா ரூ.46,920/- மதிப்புடைய கட்டுமானப் பொருட்களான சிமெண்ட், இரும்பு கம்பிகளையும் வழங்கியுள்ளார்கள்.

மேலும், தா.பழூர், தாதம்பேட்டை காமராஜர் நகர், புதுக்காலனியைச் சேர்ந்த விஸ்வநாதன் மகன் சுப்பிரமணியன் என்பவருக்கு SECC Data வின்படி முன்னுரிமை அடிப்படையில் வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டு PMAY(G) TN1374473-நாள் 31.08.2019-ன்படி பணிஆணை வழங்கப்பட்டு மேற்படி பயனாளி வீடு கட்டாமல் இருந்து வந்தநிலையில், எதிரி-1 திருமதி.ஸ்ரீதேவி, எதிரி-3 மற்றும் எதிரி-10 ஆகியோருடன் கூட்டு சேர்ந்து, பயனாளிக்கு தெரியாமல் எதிரி-10ஐ வீடு கட்ட அனுமதித்தும், எதிரி-3 தனது Login ID-யில் எதிரி-10 மற்றும் அவரது மனைவி ஆகியோரை நிற்கவைத்து JIO Tage புகைப்படம் எடுத்தும், ஆள்மாறாட்டம் செய்து எதிரி-10ன் வங்கி கணக்கு எண்ணை பதிவேற்றம் செய்து, பயனாளி அல்லாத எதிரி-10 திரு.சுப்ரமணியன் த/பெ.கலியமூர்த்தி என்பவரது வங்கி கணக்கில் தவணைத்தொகை ரூ.1,20,000/-ம் வரவு வைத்தும், தலா ரூ.46,920/- மதிப்புடைய கட்டுமானப் பொருட்களான சிமெண்ட், இரும்பு கம்பிகளையும் வழங்கியுள்ளார்கள்.

மேலும், அந்த போலி ஆவணங்களை உண்மையான ஆவணம் போல் பயன்படுத்தியுள்ளார்கள். சில ஆவணங்களை மறைத்தும் உள்ளார்கள். மேற்கண்ட செய்கையின் மூலம் 1 முதல் 10 வரையுள்ள எதிரிகள் ரூ.8,34,600/-ம் அரசுக்கு நிதியிழப்பு செய்துள்ளார்கள்.

எனவே, எதிரிகள் 1 முதல் 5 வரை உள்ளவர்கள் மீது அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 02/2026 u/s 13(2) r/w 13(1)(b) r/w 12 of PC Act 1988 (As amended in 2018) and 409, 420, 465, 468, 477(A), 471, 419 r/w 34 IPC Act-ன்படியும், எதிரிகள் 6 முதல் 8 வரை உள்ளவர்கள் மீது u/s 12 of PC Act 1988 (As amended in 2018) and 420 r/w 34 IPC Act-ன்படியும், 9 மற்றும் 10 ஆகியோர்கள் மீது u/s 12 of PC Act 1988 (As amended in 2018) and 419, 420 r/w 34 IPC Act-ன்படியும் இன்று 18.03.2026-ம் தேதி 15.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல் கனம் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி, அரியலூர் அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்கள் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பியும், ஒரு நகல் நிலைய கோப்பிலும் வைப்பப்பட்டது.

18.03.26

(பா.கவிதா)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
அரியலூர்.